DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST (POA) ACT 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 21/2018**

அ.சா. 13

Prosecution witness

(Witness examined through video conferencing in accordance with Madras High Court video conferencing Rules 2020)

| | | | |
|---|---|---|---|
| Name: | திரு. மெக்லரின் எஸ்கால் | Caste: | |
| Father's Name: | தாமஸ் எலியட் | Calling: | கூடுதல் காவல் கண்காணிப்பாளர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 58 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 30.12.2025.

( 1,2 எதிரிகள் ஆஜர். 3,4 எதிரிகள் ஆஜர் இல்லை. 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. )

முதல் விசாரணை

நான் தற்போது திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 2016 ம் வருடம் இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது திருவாடானை காவல்நிலைய கு.எண். 12/2017 சட்டப்பிரிவுகள் 294(b), 307IPC and sec 3(1)(r), 3(1)(s) of SC/ST (POA) Act-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கினை புலன் விசாரணை மேற்கொள்ள இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனது செயல்முறை ஆணை எண். C.No. 05-05/SC-ST/STAT/DCRB/RM/2017, Dated: 17.01.2017 உத்தரவின் மூலம் நியமித்து உத்தரவு பிறப்பித்தார். அந்த உத்தரவு **அ.சா.ஆ.14**. அதே தினம் நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 6.30 மணிக்கு

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2025.12.30 11:39:57 +0530

சம்பவ இடமான பானனேந்தல் கிராமத்தில் உள்ள புகார்தாரரின் முற்றத்திற்கு சென்று சாட்சிகள் காளிமுத்து  மற்றும் செந்தில்வேல் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர், வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் பார்வை மகசரில் கையெழுத்து பெற்று அவர்களை அன்றைய தினமே விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். வரைபடம் **அ.சா.ஆ.15.**     பின்பு புகார் கொடுத்த சோனைமுத்து மற்றும்  சம்பவ சாட்சிகள் மாரி, முத்து, கலா, இருதயம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்தேன். பின்பு எதிரிகளை தேடியபோது தகவலின்பேரில் சிவகங்கை பேருந்து நிலையத்தில் இருப்பதாக கிடைத்த தகவலைப்பெற்று 17.01.2017 ம் தேதி மதியம் 1.00 மணியளவில் 2,3 எதிரிகளான சண்முகம் மற்றும் இராமன் ஆகியோர்களை கைது செய்து அந்த இடத்தில் இருந்த சாட்சிகள் கருப்பையா, தர்மலிங்கம் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரிகளை விசாரித்தபோது 3 ம் எதிரி இராமன் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து மேற்படி எதிரியிடமும் சாட்சிகளிடமும் கையெழுத்து பெற்றேன். எதிரி கொடுத்த வாக்குமூலத்தில் என்னுடன் வந்தால் சம்பவத்தில் நாங்கள் பயன்படுத்திய இரும்பு கம்பிகளை மறைத்து வைத்திருக்கும் இடத்தில் இருந்து எடுத்து உங்கள் முன் ஆஜர் செய்கிறேன் என கூறினார். அதன்படி அவர் காளையார் கோவில் – திருவாடானை ரோட்டில் பானனேந்தல் விலக்கு ரோட்டில் கிழக்கு பக்கம் உள்ள பாலத்திற்கு அடியில் இருந்து நான்கு இரும்பு கம்பிகளை எடுத்து ஆஜர் செய்தார்.  இரும்பு கம்பிகளை அதே சாடசிகளான கருப்பையா,

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2025.12.30 11:40:03 +0530

தர்மலிங்கம் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன். எதிரி இராமன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிய சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.16**. பின்னர் எதிரி இராமன் எடுத்து ஆஜர் செய்த சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரிகள் சண்முகம் மற்றும் இராமனை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கில் கைப்பற்றப்பட்ட இரும்புகம்பிகளை நீதிமன்றத்தில் ஒப்படைக்க படிவம் 91 தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.17**. 24.01.2017 ம் தேதி இந்த வழக்கின் புகார்தாரர் மற்றும் எதிரிகளுக்கு சாதிச்சான்றிதழ்கள் வழங்குமாறு திருவாடானை வட்டாட்சியருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். நான் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின்படி புகார்தாரர் மற்றும் எதிரிகள் 1 மற்றும் 4 ஆகியோர்களுக்கு புகார்தாரர் சோனைமுத்து பட்டியல் இனத்தை சேர்ந்த இந்து பறையன் என்றும் 1,4 எதிரிகள் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்த இந்து யாதவர் என்றும் சாதி குறித்து அறிக்கை வழங்கினார். வாதியுடன் காயம்பட்ட மாரி என்பவரின் காயச்சான்று பெற்று அவருக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் பெரோஸ்கான் என்பவரையும், பின்பு புகார்தாரர் சோனைமுத்துக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் பாலசுப்பிரமணியனை விசாரித்து காயச்சான்று பெற்று 31.03.2017 ம் தேதி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி 1 மற்றும் எதிரி 4 மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் ஆஜராகி பிணையில் சென்றுவிட்டார்கள். 03.08.2017 ம் தேதி நான் மாறுதலாகி சென்றுவிட்டதால் வழக்கு கோப்பை எனக்கு பின்னால் பொறுப்பேற்று கொண்ட காவல்துணைக் கண்காணிப்பாளர் விஜயகுமார் அவர்களிடம் ஒப்படைத்தேன்.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2025.12.30 11:40:07 +0530

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை

| | |
|---|---|
| Thiru. Esakkimuthu<br>Junior Assistant,<br>Principal District Court,<br>Tirunelveli. | Thiru.A. Mohamed Yasin,<br>Assistant,<br>PCR Court,<br>Ramanathapuram. |

| | | |
|---|---|---|
| Co coordinator<br>Remote site | Deponent | Co coordinator<br>Court site |

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2025.12.30 11:40:11 +0530